102—

சாலையைச் செப்பனிடுதல்

***17879—திரு. லா. சந்தானம்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி உட்கோட்டம், வத்தலகுண்டு-பேரையூர் சாலையில் பிரிந்து இடையப்பட்டி புதுக்கோட்டைக்குச் செல்லும் சாலையைச் செப்பனிட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரும் நிதி ஆண்டுகளில் இச்சாலையின் முக்கியத்துவம் கருதி, முக்கியத்துவம் அளிக்கப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. லா. சந்தானம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியைப் பொறுத்த அளவிலே, எல்லாச் சாலைகளும் ஓரளவுக்கு நன்கு பராமரிக்கப்பட்டு வருகின்றன. இதிலே இந்தச் சாலையும் மிக முக்கியமான சாலை என்கின்ற காரணத்தினால்தான், அதை அரசு எடுத்துக்கொள்ளவேண்டும் என்ற வினாவினை எழுப்பி இருந்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்த ஆண்டே பரிசீலிக்கப்படும் என்று சொல்லி இருக்கிறார்கள். எனவே, அதை கவனத்திலே எடுத்துக்கொண்டு இந்த ஆண்டு அதற்குரிய நிதியினை ஒதுக்கித் தந்து செப்பனிட வேண்டுமென்று தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியிருக்கின்ற சாலையின் பெயர் வத்தலகுண்டு-பேரையூர் சாலையிலிருந்து பிரிந்து செல்லும் சாலை இடையப்பட்டி-திருச்சான்புரம்-புதூர் சாலை எனத் தற்போது பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இந்தச் சாலையின் மொத்த நீளம் 5 கிலோ மீட்டர் ஆகும். இச்சாலையின் கி.மீ. 0/0-லிருந்து 1/0 பகுதி நல்ல நிலையில் உள்ளது. கி.மீ. 1/0-லிருந்து 3/2 பகுதி, மாவட்ட இதர சாலைகள் மேம்படுத்தும் திட்டத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, மேம்படுத்தப்பட்டு உள்ளது. மீதியுள்ள கி.மீ. 3/2 முதல் 5/0 வரை உள்ள பகுதிக்கு, வரும் நிதி ஆண்டில்

2004 ஜூலை 31]

முன்னுரிமை கொடுத்து எடுத்துக்கொள்ளப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. லா. சந்தானம்.*

திரு. லா. சந்தானம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 103, திரு. கா. கந்தசாமி, மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர்.*

103—

உலக வர்த்தக நிறுவன ஒப்பந்தம்

***32132—திரு. கா. கந்தசாமி:**

மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உலக வர்த்தக நிறுவன ஒப்பந்தத்தால் ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து அரசு ஆய்வு செய்யுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் உணவு அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாணை (நிலை) எண் 121, திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை, நாள் 19-11-2001-ல் உலக வர்த்தக மைய இணைப்புப் பிரிவு—*WTO Nodal Cell*—ஒன்று, தமிழக அரசால் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இப்பிரிவு, பல்வேறு துறைகளையும், பங்கு வர்த்தகதாரர்களையும் ஒருங்கிணைத்து, ஒரு பாலமாகச் செயல்பட்டு வருகிறது. இதற்கென இந்தியப் பொருளியல் பணி பதவித் தரத்தில், ஒரு தனி அலுவலர் செயல்பட்டு வருகிறார். இவர் திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறைச் செயலாளரின் நேரடிப் பார்வைக்குட்பட்டும், வளர்ச்சி ஆணையாளரின் முழுக் கட்டுப்பாட்டின்கீழும் செயல்படுகிறார். உலக வர்த்தக மைய இணைப்புப் பிரிவு—*WTO Nodal Cell*—மைய அரசின் கருத்தினைச் சம்பந்தப்பட்ட அரசுத் துறைக்குத் தெரிவித்து, அறிக்கைகளைக் கோரிப் பெற்று, உரிய காலங்களில் அதனைக் கொண்டு செல்வதுடன், நமது மாநில அனைத்துத் துறைகளின் ஒட்டுமொத்த அறிக்கையினை நடுவண் அரசின் சம்பந்தப்பட்ட அமைச்சகங்களுக்கு உடனுக்குடன் அனுப்புகிறது.*